இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 22-03-2025

# கடனா? வளர்ச்சியா?

ஆட்சியின் மீதோ - நிதிநிலை அறிக்கையின் மீதோ குறைசொல்ல முடியாதவர்கள், 'அரசு அதிகப்படியாகக் கடன் வாங்குகிறது' என்று சொல்லி வருகிறார்கள்.

கடன் வாங்கத் தகுதியுள்ள அளவுக்கும் குறைவாகத் தான் வாங்கப்பட்டுள்ளது என்பதும் - வாங்கும் கடன் ஆக்கபூர்வமானவைகளுக்கே செலவு செய்யப்படுகிறது என்பதும் - தான் இதற்கானச் சரியான பதில் ஆகும்.

**ஒரு மாநிலம் அதன் மொத்த வருவாயில் (ஜி.எஸ்.டி.பி.) 29.1 விழுக்காடு கடன் வாங்கலாம் என்பது 15 ஆவது நிதிக்குழு விதித்துள்ள கட்டுப்பாடு ஆகும். அந்த வகையில் பார்த்தால் தமிழ்நாட்டின் கடன் என்பது அதன் மொத்த வருவாயில் 25.63 விழுக்காடு மட்டுமே!**

பிரதமராக நரேந்திர மோடி ஆட்சிக்கு வரும் போது 2014 ஆம் ஆண்டு இந்தியாவின் கடன் தொகை 55 லட்சம் கோடியாகும். இன்று அவரது பத்தாண்டு கால ஆட்சிக்குப் பிறகு 181.74 லட்சம் கோடியாக உயர்ந்திருக்கிறது. மூன்று மடங்கை விடவும் அதிகமாகி விட்டது. இத்தகைய பா.ஜ.க.தான் தி.மு.க. ஆட்சியைக் குற்றம் சொல்கிறது.

கடன் தொகை அதிகமாகி விட்டது என்று சொல்வது அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும்தான். இந்த இரண்டு கட்சிகளுக்கும் மிகச் சரியான பதிலை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சொல்லி விட்டார். குற்றச்சாட்டு வைத்தவர்களால் எதிர் கேள்வி கேட்க முடியவில்லை.

"ஒன்றிய அரசிடம் இருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை, அதாவது தமிழ்நாடு அரசுக்கு வழங்க வேண்டிய பங்களிப்பு தொகை என 2.63 லட்சம் கோடி வராமல் உள்ளது. இது தமிழகம் வாங்கும் கடனில் 32 சதவீதம் ஆகும். இதனைக் கொடுங்கள்" என்று கேட்டு இருக்கிறார் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு.

**"ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்துக்காக நிலுவையில் உள்ள ரூ.2.200 கோடி, 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் தரவேண்டிய 3,000 கோடி என பல்வேறு திட்டத்திற்கு ஒன்றிய அரசு தமிழகத்திற்கு தரவேண்டிய நிலுவை தொகை தந்தால், தமிழக அரசு பல்வேறு திட்டங்களை மக்களின் வளர்ச்சிக்காக செய்ய தயாராக உள்ளோம். ஒன்றிய அரசு உத்தரப் பிரதேசத்திற்கு கருணை காட்டுவது போல, மத்திய பிரதேசத்திற்கும், பீகாருக்கும் கருணை காட்டுவது போல தமிழகத்திற்கும் நிலுவை தொகையை கொடுத்து கருணை காட்டினால் நிதி நெருக்கடி தமிழக அரசுக்கு இருக்காது. ஒன்றிய அரசு மாநில அரசுக்குத் தொடர்ந்து கொடுக்க வேண்டியதை கொடுக்காமல் மாநில அரசு அந்த திட்டங்களை சொந்த நிதியிலிருந்து செலவு செய்து வருகிறது."** என்றும் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சொல்லி இருக்கிறார்.

தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களுக்கு ஒன்றிய அரசானது, மாநில அரசின் கொள்கைகளுக்கு எதிரான நிபந்தனைகளை விதித்து, அத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் சிரமங்களை உண்டாக்கு வதோடு மட்டுமல்லாமல், அத்திட்டங்கள் முடங்கும் சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது.

**ஒருங்கிணைந்த பள்ளிக் கொள்கைத் திட்டத்துக்கு பணம் கொடுப்பதையும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள்வதையும் இணைத்து ஒன்றிய பா.ஜ.க. அரசு. மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் தான் பணம் என்று பிளாக்மெயில் செய்தது ஒன்றிய அரசு. 'உன் பணமே வேண்டாம்' என்று சொல்லி பிளாக்மெயில் அரசாங்கத்தை பீதி அடைய வைத்தார் முதலமைச்சர் அவர்கள்.**

**மூன்று இயற்கை பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்துள்ளது. மாநில அரசு கோரிய 37,906 கோடி ரூபாயில் ஒரு சதவீதம்கூட இதுவரை தரப்படவில்லை. குடிநீர் திட்டமாக இருந்தாலும் வீடு கட்டும் திட்டமாக இருந்தாலும் நிதி தருவது இல்லை. எய்ம்ஸ் மருத்துவமனைக்கு கட்டவில்லை. இவ்வளவையும் மீறி போராடிக் கொண்டே ஆட்சி நடத்தி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். கடன் வாங்கி ஆட்சி நடத்தும் நிலைமையை உருவாக்கியதே ஒன்றிய பா.ஜ.க. அரசு தான்.**

கடன் வாங்குவதைப் பற்றி பழனிசாமி பேசுவதுதான் நகைப்புக்குரியது. அ.தி.மு.க. ஆட்சி காலத்தில்தான் கடன் வளர்ச்சி 128 விழுக்காடாக ஆகியது. ஜெயலலிதா 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும் போது தமிழ்நாட்டின் கடன் 1,01,349 கோடி ஆகும். அவர் ஆட்சியில் இருந்த 2016 ஆம் ஆண்டு வரையிலான கடன் என்பது 2,11,066 கோடி ஆகும்.

2017 ஆம் ஆண்டு முதல் 2021 வரையில் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்தார். அவர் ஆட்சியை விட்டு இறங்கும் போது விட்டுச் சென்ற கடன் தொகை 4,80,300 கோடி ஆகும். இதனை வைத்துத்தான், 'பழனிசாமி ஆட்சியின் கடனின் வளர்ச்சி 128 விழுக்காடு' என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சொல்கிறார்.

ஜெயலலிதா ஆட்சி காலத்தில் கடன் வளர்ச்சியானது 108 விழுக்காடு இருந்தது. பழனிசாமி ஆட்சியில் கடன் வளர்ச்சியானது 128 விழுக்காடு ஆனது. இதனை 93 விழுக்காடாகக் குறைத்துள்ளது தி.மு.க. அரசு.

**அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தமிழ்நாடு எதிலாவது வளர்ந்துள்ளதா என்றால் இல்லை. ஆனால் 2021 முதல் தமிழ்நாடு வளர்ந்து வருகிறது. 2021 ஆம் ஆண்டிலிருந்தே 8 அல்லது அதற்கும் மேலான பொருளாதார வளர்ச்சி விகிதத்தைத் தமிழ்நாடு கொண்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) 9.21 பங்களிப்பை தமிழ்நாடு கொண்டுள்ளது. தனிநபர் வருமானம் தேசிய சராசரியாக 1.69 லட்சமாக இருக்கும் நிலையில் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 2.78 லட்சமாக இருக்கிறது. இது தேசிய சராசரியை விட 1.64 மடங்கு அதிகம். இவை எல்லாம் தமிழ்நாடு அடைந்துள்ள வளர்ச்சிகள் ஆகும்.**

இதை வைத்துப் பார்க்கும் போது தமிழ்நாட்டின் நிதியானது, அனைத்து வளர்ச்சிக்குமான முதலீடாகத் தான் பயன்படுத்தப் பட்டுள்ளதே தவிர, கடன்வாங்கிவிரயம்செய்யப்படவில்லை. பலவேறு நலத்திட்டங்களுக்குத்தான் செலவு செய்யப்படுகிறது. மகளிர் உரிமைத் தொகைக்காக இன்று தரப்படும் தொகையானது, மகளிரின் சமூக பொருளாதார பங்களிப்பை அதிகரிக்கவே செய்கிறது. இவையும் ஒருவகையில் வளர்ச்சித் திட்டமே ஆகும்.

**எனவே பொத்தாம் பொதுவாக கடன் வாங்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை விட்டுவிட்டு, 'எதற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது' என்பதைப் பார்க்க வேண்டும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2025) தலைமைச் செயலகத்தில், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் ஜெ.கென்னடி, ஜோதிஸ்வரன், கோவிந்தராஜ், தெய்வசிகாமணி, கோபி கணேசன், விஸ்வநாதன், வேட்டவலம் கே.மணிகண்டன், சத்தியநாராயணன், அக்ரி கா.பசுமைவளவன், கே.வி. இளங்கீரன், நாகக்குமார், முருகன், திருமதி சுகுணா, வெங்கடேசன், ஆல்பர்ட் ஆண்டனி, ஜேம்ஸ் பிரடெரிக், முனைவர் ஆர்.வினோத், அக்ரி வசந்தகுமார், அக்ரி தமிழ்இன்பன், திருமதி அக்ரி அ. சாந்தி, ராஜேந்திரன், ஆர். சங்கரய்யா, தங்கதர்மராஜன், கே.விருதகிரி, என்.சீதாராமன், கே.பிரபாகரன் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாடு அரசின் 2025–26 ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில், தென்னை வளர்ச்சிக்கான திட்டங்கள், கரும்புக்கான ஊக்கத்தொகை, டெல்டா பகுதிகளில் சேமிப்பு கிடங்குகள், நெல் உலர்த்தும் இயந்திரங்கள் வழங்குதல், மக்காச்சோளம் உற்பத்தி மேம்பாட்டு திட்டம், உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு பொருளீட்டு கடன், ஆதிதிராவிடர் பழங்குடியினர் விவசாயிகளுக்கு கூடுதல் மானியம், முதலமைச்சரின் ஆயிரம் உழவர் சேவை மையங்கள் போன்ற பல்வேறு திட்டங்களை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செயலாளர் வி.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் ஆகியோர் உள்ளனர்.

### நாடாளுமன்றத் தொகுதிகள் மறுசீரமைப்பு: - சென்னையில்

# இன்று 'கூட்டு நடவடிக்கைக் குழு' குறித்து ஆலோசனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - 7 மாநில முதல்வர்கள் பங்கேற்பு!

*சென்னை, மார்ச் 22 -*

2026ஆம் ஆண்டுக்குப் பின் மேற்கொள்ளப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்படவேண்டிய முடிவுகள் குறித்தும், 'கூட்டு நடவடிக்கைக் குழு' அமைத்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள இன்று (22.3.2025) ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடைபெறுகிறது. இதுகுறித்து பல்வேறு மாநில முதலமைச்சர்கள் மற்றும் முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியிருந்தார்.

2026 ஆம் ஆண்டுக்குப் பின் மேற்கொள்ளப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அதுகுறித்து மேற்கொள்ளவேண்டிய அணுகுமுறை குறித்தும் முடிவுகள் மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 5.3.2025 அன்று சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றினை கூட்டினார். அக்கூட்டத்தில் இப்பிரச்சினை தொடர்பாக முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக, இப்பிரச்சினையினால் பாதிக்கப்படக் கூடிய மாநிலங்களிலுள்ள கட்சிகளின் முக்கியப் பிரதிநிதிகளைக் கொண்டு "கூட்டு நடவடிக்கைக் குழு" அமைத்து, அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களையும், அவை சார்ந்த போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், மக்கள் மத்தியில் இப்பிரச்சினை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், அதற்கான முறையான அழைப்பை மேற்படி கட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைத்திடவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 7 மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்களுக்கும், முன்னாள் முதலமைச்சர்களுக்கும், அம்மாநிலங்களில் உள்ள பல்வேறு முக்கிய கட்சிகளின் தலைவர்களுக்கும் மார்ச் 7 ஆம் தேதி கடிதம் எழுதியிருந்தார்.

மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி, தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, தெலங்கானா முன்னாள் முதலமைச்சர் சந்திரசேகர ராவ், ஒடிசா முன்னாள் முதலமைச்சர் நவீன் பட்நாயக், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, கர்நாடகா துணை முதலமைச்சர் சிவகுமார், பஞ்சாப் முதலமைச்சர் பகவத்மான், ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு மற்றும் ஆந்திரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இக்கடிதம் மேலும், மேற்குறிப்பிட்ட 7 மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு முக்கியக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

ஒவ்வொரு மாநில முதல்வரையும் தமிழ்நாடு அமைச்சர் மற்றும் தி.மு.கழக எம்.பி.க்கள் நேரில் சந்தித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சார்பில் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.

அவர்களும் அழைப்பபை ஏற்று சென்னையில் இன்று நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

# குற்றச் சம்பவங்கள் கழக ஆட்சியில் குறைவு!... சட்டப் பேரவையில் முதல்வர் விளக்கம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு நிலைமை குறித்து இங்கு சில கருத்துகளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் போகிற போக்கிலே சொல்லிவிட்டு சென்றிருக்கிறார்கள். இவை குறித்த புள்ளி விவரங்களோடு இந்த அவைக்கு சிலவற்றைநான்தெரிவிக்கவிரும்புகிறேன்.

**குற்றச் சம்பவங்களில் காவல்துறை துரித நடவடிக்கை!**

காவல் துறை சுதந்திரமாகச் செயல்பட்டு, குற்றவாளிகள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. எந்தவிதமான பாரபட்சமும் இதில் காட்டப்படுவதில்லை. குற்றச் சம்பவங்கள் நிகழ்ந்த பிறகு மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கைகள் ஒருபுறம்; குற்றச் சம்பவங்கள் நிகழாமல் நடைபெறாமல் இருக்க மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மறுபுறம் என இரு வகையிலும் காவல் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக, தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளி கள் மற்றும் கூலிப்படையினர் எனக் கருதப்படுவோரின் நட வடிக்கைகள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு முன்னெச்ச ரிக்கை கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான இனங்களில் குண்டர் சட்டத்தின்கீழும் கைது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு காவல்துறையின் கடும் நடவடிக்கைகள்!**

கடந்த 2024 ஆம் ஆண்டு மட்டும் 4 ஆயிரத்து 572 சமூக விரோதிகள் அடையாளம் காணப்பட்டு குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு காவல் துறை மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக, 2023 ஆம் ஆண்டு கொலை, கொலை முயற்சி உள்ளிட்ட குற்றங்கள் 49 ஆயிரத்து 280 ஆக இருந்தது; 2024 ஆம் ஆண்டில் அது 31 ஆயிரத்து 498 ஆகக் குறைந்துள்ளது. ஒரே ஆண்டில் 17 ஆயிரத்து 782 குற்றங்களைக் குறைத்திருக்கிறோம்.

சில கொலைக் குற்றங்கள் நடைபெறும் காட்சிகள், சமூக ஊடகங்களில் வெளிவரும் போது அதிக எண்ணிக்கையில் குற்றங்கள் நடைபெறுவது போன்ற தவறான கருத்து திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றது. உண்மையில் எண்ணிக்கையின் அளவில் பார்க்கும்போது, 2024 ஆம் ஆண்டில் கொலைக் குற்றங்கள் 6.8 விழுக்காடு குறைந்திருக்கின்றன.

**கடந்த ஆண்டைவிட குற்றங்கள் குறைவு!**

அதாவது, முந்தைய ஆண்டோடு ஒப்பிடும்போது 109 கொலைகள் குறைந்திருக்கின் றன. அதேபோல், பழிக்குப் பழி வாங்கும் கொலைகளின் எண்ணிக்கையும் 2024 ஆம் ஆண்டில்42.72விழுக்காடுகுறைந்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படுவதன் ஒரு பகுதியாக, பொது மக்கள் அதிகளவில் கூடும் திருவிழாக்கள், பெரிய பொழுதுபோக்கு இடங்கள், சுற்றுலாத்தலங்கள் போன்ற இடங்களில் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திட காவல் துறை கூடுதல் எண்ணிக்கையிலான காவலர்களை ஈடுபடுத்தி, எந்தவிதமான அசம்பாவித சம்பவங்களும் நடைபெறாமல் செவ்வனே பணியாற்றி வருகிறார்கள் என்பதை இந்த அவையில் உள்ள மாமன்ற உறுப் பினர்கள் நன்கு அறிவார்கள்.

**குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்த அரசு!**

குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தருவதிலும் இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. 2023 ஆம் ஆண்டில் 181 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளுக்கு நீதிமன்றங் கள் மூலம் தண்டனை வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், 2024 ஆம் ஆண்டில் 242 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்கு களில் காவல் துறை காட்டிய தீவிர அக்கறையே இதற்கு காரணம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 2024 ஆம் ஆண்டில் மட்டும், 150 சரித்திரப் பதிவேடு ரவுடிகளுக்கு ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகளுக்கு மேல் கடுங்காவல் தண்டனை நீதிமன்றங்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

**அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட கழக ஆட்சியில் கொலை -கொள்ளை குறைவு!**

இறுதியாக ஒரேயொரு புள்ளி விவரத்தை மட்டும் தங்கள் வாயிலாக இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 2012 முதல் 2024 ஆம் ஆண்டுவரை நிகழ்ந்த கொலைகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அதாவது, 2012 ஆம் ஆண்டு நிகழ்ந்த கொலைகளின் எண்ணிக்கை 1,943. இது தான் கடந்த 12 ஆண்டுகளில் நிகழ்ந்த மிக மிக அதிகமான எண்ணிக்கை. 2013 ஆம் ஆண்டு நிகழ்ந்த கொலைகளின்எண்ணிக்கை1,927. கொரோனா காலத்திலும், லாக்டவுன் இருந்தபோதும், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2020 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கொலைகளின் எண்ணிக்கை 1,661.

கடந்த ஆண்டுகளின் வரலாறு இவ்வாறு இருக்க, தற்போது நமது ஆட்சிக் காலத்தில் காவல் துறை மேற்கொண்டு வரும் கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த 12 ஆண்டுகளில் 2024 ஆம் ஆண்டில்தான் மிக, மிகக் குறைவான எண்ணிக்கையில், அதா வது, 1,540 கொலைகள் மட்டுமே நிகழ்ந்துள்ளன; இதுதான் உண்மை. இதை நடுநிலையாளர்களும், பொதுமக்களும் நன்கு உணர்ந்திருக்கி றார்கள்.

**அ.தி.மு.க. ஆட்சியில் சீரழிந்த சட்டம் - ஒழுங்கு!**

குற்றங்களைத் தடுத்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்து, பொது அமைதியைத் தொடர்ந்து நிலைநாட்டிட தமிழ்நாடு காவல் துறை எனது தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக முன்விரோ தம் காரணமாக நடைபெறும் சில நிகழ்வுகளை வைத்து, இந்த அரசின் மீது பழி சுமத்தி அரசியல் ஆதாயம் அடைய நினைப்போர் சென்ற ஆட்சியில் தமிழ்நாட்டில் சட்டம்ஒழுங்கு எப்படி சீரழிந்து கிடந்தது என்பதை நான் இங்கே தெரிவித்த புள்ளிவிவரங்கள் அடிப்படையில் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்.

### டாஸ்மாக் வழக்கு: நடவடிக்கை எடுக்க

# அமலாக்கத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் தடை!

சென்னை, மார்ச் 22 -

டாஸ்மாக் நிறுவனத்தில் சோதனை நடத்தியது தொடர்பாக மார்ச் 25ம் தேதி வரை எந்த மேல்நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என அமலாக்கத் துறைக்கு உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்றம், தமிழக அரசு மனுவுக்கு பதிலளிக்கும்படியும் உத்தரவிட்டுள்ளது.

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை சோதனை நடத்திய அமலாக்கத் துறை, டாஸ்மாக் நிறுவனத்துக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்தது, பார் உரிமம் வழங்கியது, மதுபானங்களை மதுபானக் கடைகளுக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கு டெண்டர் வழங்கியது உள்ளிட்டவற்றில் ரூ.1,000 கோடி முறைகேடு நடந்துள்ளதாக அறிக்கை வெளியிட்டது.

அமலாக்கத் துறையின் இந்த சோதனையை அரசியலமைப்பு சட்டத்தின் கூட்டாட்சி கட்டமைப்புக்கு விரோத மானது என அறிவிக்கக் கோரியும், அரசு அனுமதியின்றி நடத்தப் பட்ட சோதனையை சட்டவிரோதனானது என அறிவிக்க கோரியும், விசாரணை என்ற பெயரில் டாஸ்மாக் அதிகாரிகளை துன்புறுத்தக் கூடாது என அமலாக்கத் துறைக்கு உத்தரவிடக் கோரி தமிழக உள்துறை செயலாளரும், டாஸ்மாக் நிர்வாக இயக்குநரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு, நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் என். செந்தில் குமார் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு மணல் குவாரி விவகா ரத்தில் அமலாக்கத் துறை இதுபோல சோதனை நடத்தியது. மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பிய சம்மனுக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்தது. ஆனால் உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஆஜராக உத்தரவிட்டது. அதன்படி விசாரணைக்கு ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், மாநில அரசு அனுமதி பெற்றுதான் சோதனை நடத்த வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமலாக்க துறையின் நடவடிக்கை தொடர்பாக குறிப் பிட்டு கோரிக்கை வைக்காமல் பொத்தாம் பொதுவாக கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர். மேலும், அதனை திருத்தம் செய்து புதிய மனுவை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

தொடர்ந்து டாஸ்மாக் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விக்ரம் சவுத்ரி, "சோதனை நடத்தும் போது, அதற்குரிய காரணங்களை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். எந்தத் தகவலும் தெரிவிக்காமல் அலுவலகத்துக்குள் நுழைந்து அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தினர். குற்றம் மூலம் பணம் ஈட்டப்பட்டு சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்யப்பட்டதற்கு சந்தேகப்படுவதற்கான காரணங்கள் இருக்க வேண்டும்." எனத் தெரிவித்தார்.

மேலும், "60 மணி நேரம் பெண் அதிகாரிகள் உள்ளிட்டோரை சட்டவிரோதமாக அமலாக்க துறையினர் சிறை பிடித்தனர். இது அதிகாரிகளின் தனிநபர் சுதந்திரத்துக்கு விரோதமானது." என்றார். அரசு தலைமை வழக்கறிஞர், "பெண் அதிகாரிகள் காலை 11 மணி முதல் நள்ளிரவு வரை சிறை பிடித்துள்ள னர். அதிகாலை 1 மணிக்கு சிலரை வெளியில் செல்ல அனுமதித்து விட்டு காலை 8 மணிக்கு திரும்ப வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர்" என்றார்.

இதையடுத்து நீதிபதி கள், டாஸ்மாக் அலுவலகம் சென்றதற்கான காரணங்களை அமலாக்கத் துறை தெரிவித்திருக்க வேண்டும் என்றுக்கூறி இரவில் ஏன் சோதனை நடத்தப்பட்டது என அமலாக்கத் துறைக்கு கேள்வி எழுப்பினர்.

இதை மறுத்த மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், இரவில் சோதனை நடத்தப்பட வில்லை. அனைவரும் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர் என விளக்க மளித்தார்.

ஆனால், "பொய் சொல்ல வேண்டாம். அனைத்தும் செய்தித்தாள்களில் வெளியாகியுள்ளது." எனக் குறிப்பிட்ட நீதிபதிகள், அமலாக்க துறை தனது அதிகாரத்தை செயல்படுத்திய விதத்தை தான் கேள்வி எழுப்புகிறோம் எனக் கூறி, அமலாக்கத் துறை பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை மார்ச் 25ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

மேலும், அதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க கூடாது என உத்தரவிட்ட நீதிபதிகள், எந்த வழக்குகளின் அடிப்படையில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது என்பது குறித்த விவரங்களையும் பதில் மனுவில் தெரிவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டனர்.